1970 மார்ச் 12]

பெட்டிகள் முதலியவை தயார்செய்தல், இப்படி பல்வேறு பொருள்கள் தயார் செய்து வருகிற சிறு சிறு காட்டேஜ் இண்டஸ்டிரீஸ் என்று சொல்லப்படுகிற சிறு தொழில்களைச் செய்கிறார்கள். அது அவர்களுடைய செலவுக்கு சரிக்கட்டிப் போகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

(2) ஒற்றிவைப்புத் தீர்மானம்.

மின்சாரக் கட்டண உயர்வை எதிர்த்து கோவை மாவட்ட விவசாயிகளுடைய உண்ணாவிரதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. என். எஸ். வி. சித்தன், திரு. வை சுவாமிநாதன், திரு. எம். சுரேந்திரன், திரு. ஏ. அ. சுப்பராஜா, திரு. சோ. அழகர்சாமி, திரு. ஆ. கு. சுப்பையா, திரு. என். மருதாசலம் ஆகியோர் சட்டப் பேரவையின் 42-வது விதியின்கீழ் விவசாயிகளுக்கான மின்சாரக் கட்டணத்தை 8¼ காசிலிருந்து 10 காசுகளாக தமிழக அரசு உயர்த்தியிருப்பதை எதிர்த்து கோவை மாவட்ட விவசாயிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்பு உண்ணாவிரதம் ஆரம்பித்திருப்பதைப்பற்றி விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்கவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள்.

இது அரசாங்கத்தினுடைய அன்றாட அலுவலுக்குட்பட்டது. மேலும், உண்ணாவிரதம் இருப்பதைப்பற்றி இந்த அவை விவாதிப்பது என்பது முறையாகாது. இன்னும் மானியக் கோரிக்கையின் விவாதத்தின்போது இதுபற்றிய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(3) தகவல் கோரல்.

கூட்டுறவுத் துறை அமைச்சர்மீது எதிர்க்கட்சித் தலைவர் சாட்டியுள்ள குற்றச்சாட்டு குறித்து.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன். தலைவர் அவர்களே, மூன்று நாட்களுக்கு முன்பு, சட்ட மன்றத்திலே மரியாதைக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் திரு. ஆதித்தனார் அவர்கள் 85 லட்ச ரூபாய் வருமான வரி கொடுக்கவில்லை, வருமான வரி இலாகாவினர் கோர்ட்டில் வழக்குப் போட்டு இருக்கிறார்கள் என்றும், அதற்கான ஆதாரங்களைப் போதிய அளவில் தங்களிடம்